## தேசிய செய்திகள்

**இந்திய கடற்படையானது இளைஞர்களுக்காக "ஜூல்லி லடாக்" என்ற முன்னெடுப்பை தொடங்கியுள்ளது.**

- லடாக்கில் பொது சேவையைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், அங்குள்ள இளைஞர்கள் மற்றும் பொது மக்களுடனான இணைப்பை மேம்படுத்தவும் இந்திய கடற்படையானது "**ஜூல்லி லடாக்**" என்ற முன்னெடுப்பு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது லடாக்கில் வடக்கு பிராந்தியத்தில், மத்திய அரசின் திட்டங்களான **ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்** மற்றும் லடாக் பகுதியில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் "**அக்னிபாத் திட்டம்**" உட்பட இந்திய கடற்படையால் வழங்கும் தொழில் வாய்ப்புகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

**அமெரிக்காவிலிருந்து "30 MQ-9B பிரிடேட்டர் ட்ரோன்களை" வாங்குவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.**

- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் சமீபத்தில் நடைபெற்ற பாதுகாப்பு கையகப்படுத்துதல் கவுன்சில் (DAC) கூட்டத்தில் **30 MQ-9B ட்ரோன்** கொள்முதல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது மற்றும் மோடி மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இடையேயான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, சுமார் 3 பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்த கொள்முதல் ஒப்பந்தம் அறிவிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- கடல்சார் கண்காணிப்பு, வானத்திலிருந்து இலக்குகளை துல்லியமாக வீழ்த்துவது, நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக, **வேட்டையாடும்-கொலையாளி** என்று அழைக்கப்படும் இந்த 30 MQ-9B ட்ரோன்கள் வாங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**NHAI - குறுகிய காலத்தில் விபத்து ஏற்பட்ட இடங்களை சரிசெய்வதற்கான முன்னெடுப்பை தொடங்கியுள்ளது.**

- சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துக்குள்ளாகும் இடங்களைச் சரிசெய்வதற்கான வழிகாட்டுதல்களை மக்களுக்கு கொண்டு செல்வதற்கான ஒரு முன்னெடுப்பு முயற்சியை NHAI எடுத்துள்ளது.
- இந்த முன்னெடுப்பு திட்டத்தின் கீழ், விபத்து ஏற்படக்கூடிய இடங்களைச் சரிசெய்வதற்காக ஒரு 1 லட்சத்திலிருந்து 25 லட்சம் வரை சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**'இணையத்தில் பாதுகாப்பாக இருங்கள்' என்ற முன்னெடுப்பை நடத்த மத்திய அரசு திட்டம்.**

- மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது(MeitY) 'இணையதளத்தில் பாதுகாப்பாக இருங்கள்' என்ற முன்னெடுப்பை **Google** உடன் இணைந்து நடத்த திட்டமிட்டுள்ளது.
- பன்மொழி டிஜிட்டல் உள்ளடக்கம், இணையப் பாதுகாப்பு தொடர்பான கல்வி திட்டங்கள் மற்றும் **இணையத்தில் தகவல்களை எவ்வாறு வழிநடத்துவது** என்பது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பு தொடங்க உள்ளது.

## சர்வதேச செய்திகள்

**ஜப்பானானது UNHCR உடன் 2.9 மில்லியன் அமெரிக்க டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.**

- வங்கதேசத்தில் வாழும் ரோஹிங்கியா அகதிகளின் வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் பொது வாழ்வு தேவைகளுக்கு உதவுவதற்காக, ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையருக்கு (UNHCR) ஜப்பான் சுமார் 2.9 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- **UNHCR** தலைமையில் வங்கதேச பிரதிநிதி ஜோஹன்னஸ் வான் மற்றும் வங்கதேசத்திற்கான ஜப்பான் தூதர் இவாமா கிமினோரி ஆகியோர் வங்கதேச தலைநகரமான **டாக்காவில்** இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநில செய்திகள்

**உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ள சிறைகளை "சீர்திருத்த இல்லங்களாக" மாற்ற திட்டம்.**

- உத்திர பிரதேச மாநிலத்தின் முதல்வர் யோகி ஆதித்யநாத் ஜூன் 15 அன்று சிறை தொடர்பாக சில சீர்திருத்தங்களை மேற்கொண்டு மாநிலத்தில் உள்ள சிறைகளை **சீர்திருத்த இல்லங்களாக** மாற்றுவதற்கான உத்தரவை வெளியிட்டார்.
- **2023 நவீன சிறைச்சாலைச் சட்டமானது** சமீபத்தில் இந்திய அரசால் தயாரிக்கப்படுவதாகவும் மேலும் அது கைதிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கான வழிமுறைகளை பின்பற்றி தெளிவாக உருவாக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**காற்றாலை மின்சாரத்தில் ராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது.**

- இந்திய அரசாங்கத்தின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், ஜூன் 15 அன்று புதுதில்லியில் உலகளாவிய காற்று தினத்திற்கான மாநாட்டை நடத்தியது.
- இந்தியாவில் காற்றாலை ஆற்றலை மேம்படுத்தல் மற்றும் விரைவுபடுத்துவதற்கான சாத்தியமான வழிகளைப் பற்றி விவாதிப்பதை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "**பவன் - உர்ஜா: இந்தியாவின் எதிர்காலத்தை மேம்படுத்துதல்**" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

ExamsDaily

- மேலும் இந்த மாநாட்டில், 2022-23 நிதியாண்டில் **ராஜஸ்தான், குஜராத் மற்றும் தமிழ்நாடு** ஆகிய மாநிலங்கள் அதிக காற்றாலை திறனை அடைந்து முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளது என மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அருணாச்சல பிரதேசத்தின் பழமை வாய்ந்த "விஹு குஹ்" திருவிழாவானது தொடங்கியது.**

- அருணாச்சல பிரசேத்தின் மிகவும் பழமை வாய்ந்த **தங்சா** பழங்குடியினரினால் மிகவும் பாரம்பரிய திருவிழாவாக கொண்டாடப்படும் **விஹு குஹ்** திருவிழாவானது ஜூன் 15 அன்று தொடங்கியுள்ளது.
- மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள நல்லிணக்கத்தை போற்றும் வகையில், இந்த விழாவானது ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

**2 நாள் "அறிவியல்-20" மாநாடானது போபாலில் நடத்த திட்டம்.**

- இந்தியாவின் ஜி-20 தலைமையின் கீழ் இரண்டு நாட்களுக்கான "**அறிவியல்-20**" மாநாடானது போபாலில் ஜூன் 16 அன்று தொடங்கியுள்ளது. இந்த மாநாட்டிற்கு இந்திய தேசிய அறிவியல் அமைப்பின் தலைவர் அசுதோஷ் சர்மா தலைமையேற்று நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- "**சமூகம் மற்றும் கலாச்சாரத்துடன் அறிவியலை இணைத்தல்**" என்பது இந்த மாநாட்டிற்கான கருப்பொருளாகும்.

## நியமனங்கள்

**சஞ்சய் குமார் - கெயில் நிறுவனத்தின் இயக்குனராக பொறுப்பேற்பு.**

- இந்திய பொது நிறுவனமான கெயில்(GAIL) லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனராக (சந்தைப்படுத்துதல்) "**ஸ்ரீ சஞ்சய் குமார்**" ஜூன் 15 அன்று பொறுப்பேற்றுள்ளார்.
- இந்த நியமனத்திற்கு முன், ஏப்ரல் 2022 முதல் இந்தியாவின் மிகப்பெரிய CNG விநியோக நிறுவனமான **இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனத்தின்** நிர்வாக இயக்குநராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பாகிஸ்தானுக்கான முதல் பெண் பிரிட்டிஷ் பெண் தூதராக "ஜேன் மேரியட்" நியமனம்.**

- பாகிஸ்தானுக்கான அடுத்த பிரிட்டிஷ் உயர் ஆணையராக மூத்த அதிகாரி **ஜேன் மேரியட்டை** இங்கிலாந்து நாடானது ஜூன் 15 அன்று நியமித்துள்ளது. இந்த நியமனத்தில் மூலம் இவர் பாகிஸ்தான் இஸ்லாமாபாத்துக்கான "**முதல் பெண் பிரிட்டிஷ் பெண் தூதர்**" என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார்.
- இவர் முந்தய காலங்களில் ஈராக்கிற்கு மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பிரிட்டனின் சர்வதேச விவகாரங்களை சிறப்பாக கையாண்டதால் இந்த பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று என்று உயர் ஆணையாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**டேவிஸ் கோப்பை போட்டி இயக்குநராக "பெலிசியானோ லோபஸ்" நியமனம்.**

- டேவிஸ் கோப்பையின் இறுதிப் போட்டிக்கான இயக்குநராக **பெலிசியானோ லோபஸ்** தலைமையேற்று நடத்துவதற்காக, நியமிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு ஜூன் 15 அன்று அறிவித்துள்ளது.
- இவர் இந்த நியமனத்தின் மூலம் தனது சிறப்பான செயல்முறையின் மூலம் போட்டியை மேம்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விளையாட்டு செய்திகள்

**கேஎஸ்எஸ்எம் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் வருண் தோமர் காற்றமுத்த துப்பாக்கி பிரிவில் தங்கம் வென்றார்.**

- சமீபத்தில் ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் பதக்கம் வென்ற வருண் தோமர், ஜூன் 15 அன்று நடைபெற்ற குமார் சுரேந்திர சிங் நினைவு துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்களுக்கான 10 மீட்டர் காற்றமுத்த துப்பாக்கி பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.
- மேலும் இந்த இறுதிப் போட்டியில் ஆறு துப்பாக்கிச் சுடும் வீரர்களைக் கொண்ட இராணுவ துப்பாக்கிச் சுடுதல் பிரிவிலிருந்து சாகர் டாங்கி 219.4 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

## இரங்கல் செய்திகள்

**இரண்டு முறை ஆஸ்கார் விருது பெற்ற நடிகை க்ளெண்டா ஜாக்சன் மறைவு.**

- இரண்டு முறை ஆஸ்கார் விருது பெற்ற நடிகையான க்ளெண்டா ஜாக்சன், தனது 87வது வயதில் நீண்ட நாள் உடல்நல குறைவின் காரணமாக உயிரிழந்துள்ளார்.
- இவர் இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தவர் மற்றும் இவர் BAFTA மற்றும் இரண்டு முறை ஆஸ்கார் பட்டத்தையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும்.

## முக்கிய தினம்

**பாலைவனமாதல் மற்றும் வறட்சியை எதிர்ப்பதற்கான உலக தினம் 2023**

- பல்வேறு இடங்களானது பாலைவனமாக்குதலை தடுப்பதற்கான சர்வதேச முயற்சிகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 17 அன்று அனுசரிக்கப்படுகிறது.

Examsdaily

- "அவளுடைய நிலம். அவளுடைய உரிமைகள்" (**Her Land. Her Rights)** என்பது இந்த ஆண்டுக்கான கருப்பொருளாகும்.

Examsdaily